*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 1, issue 1, pp. 97- 104, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# கிளியனூர்ப் பகுதியின் வரலாற்றுப் பின்னணி

**முனைவர் ரா. இளமாறன்[1] மற்றும் முனைவர் பெ.சங்கர்[2]**

[1,2]உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரி, விருத்தாசலம் – 606 001

*ஆய்வுச் சுருக்கம்*

கலைச் சின்னங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு முன்னர் அக்கலைச்சின்னங்கள் அமைந்துள்ள பகுதியின் வரலாற்றை நன்கு அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டத்தில் அமைந்துள்ள பேரூர் கிளியனூராகும். இவ்வூர் திண்டிவனம் - பாண்டிச்சேரிச் சாலையில் திண்டிவனத்திலிருந்து ஏறதாழ இருபது கிலோ மீட்டர் தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. பண்டைய தொண்டைமண்டலத்தில் அமைந்துள்ள கிளியனூரும் அதனை ஒட்டியுள்ள அகன்ற நிலப்பகுதிகளும் சங்க காலத்திலிருந்து விஜயநகரப் பேரரசர்களின் காலம் வரை ஓய்மாநாடு என்றழைக்கப்பட்டது. கிளியனூரும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக மனித நாகரிகத்தின் கீழிருந்து வந்துள்ளது என்பதைப் பல்வேறு தொல்பொருள் சின்னங்கள், இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. இக்கட்டுரையில் கிளியனூரும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் எங்ஙனம் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அரச வம்சத்தினரால் ஆட்சி செய்யப்பட்டது என்பதைக் காணலாம்.

**குறிச்சொற்கள்:** கலைச் சின்னங்கள், கிளியனூர்

கலைச் சின்னங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு முன்னர் அக்கலைச்சின்னங்கள் அமைந்துள்ள பகுதியின் வரலாற்றை நன்கு அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டத்தில் அமைந்துள்ள பேரூர் கிளியனூராகும். இவ்வூர் திண்டிவனம் -



©2023 by KRISHMA PUBLICATION

பாண்டிச்சேரிச் சாலையில் திண்டிவனத்திலிருந்து ஏறதாழ இருபது கிலோ மீட்டர் தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. பண்டைய தொண்டைமண்டலத்தில் அமைந்துள்ள கிளியனூரும் அதனை ஒட்டியுள்ள அகன்ற நிலப்பகுதிகளும் சங்க காலத்திலிருந்து விஜயநகரப் பேரரசர்களின் காலம் வரை ஓய்மாநாடு என்றழைக்கப்பட்டது. கிளியனூரும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக மனித நாகரிகத்தின் கீழிருந்து வந்துள்ளது என்பதைப் பல்வேறு தொல்பொருள் சின்னங்கள், இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. இக்கட்டுரையில் கிளியனூரும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் எங்ஙனம் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அரச வம்சத்தினரால் ஆட்சி செய்யப்பட்டது என்பதைக் காணலாம்.

**வரலாற்றுக்கு முந்தைய காலம்**

வரலாற்று அறிஞர்கள் வரலாற்றை இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை முறையே வரலாற்றுக்கு முந்தைய காலம் மற்றும் வரலாற்றுக் காலம் என்பதாகும். வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது மனிதன் படிப்பறிவு. எழுத்தறிவு பெறாத காலமாகும். எனவே இக்கால கட்டத்தைப் பற்றி அறிந்துகொள்வதற்கு இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள் கிடைக்கப் பெறவில்லை. ஆகையால் இக்கால வரலாற்றை அறிந்துகொள்ள வரலாற்றுக்கு முந்தைய கால மனிதன் விட்டுச்சென்ற தொல்பொருள்கள் மட்டுமே நமக்குப் பெரும் துணைபுரிகின்றன.[1]

கிளியனூரைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சார்ந்த தொல்பொருள்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன. புதுப்பட்டு, இராயநல்லூர் மற்றும் கொண்டாமூர் ஆகிய ஊர்களில் பெருங்கற்கால ஈமச்சின்னமான முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன.[2] கந்தாடு என்ற ஊரில் பெருங்கற்காலக் கல்வட்டங்கள், முதுமக்கள் தாழிகள் மற்றும் சவப்பேழைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[3] பெருமுக்கல் என்னுமிடத்தில் மனித உருவங்கள், மான், புலி, திரிசூலம், அம்பு, வில் போன்ற பெருங்கற்கால ஓவியங்களும், முதுமக்கள் தாழிகளும், கறுப்பு சிவப்புப் பானை ஓடுகளும் மற்றும் கறுப்பு வண்ணம் பூசிய பானை ஓடுகளும் கிடைத்துள்ளன.[4] சேவூரில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த கல்வட்டங்கள் மற்றும் சிவப்புப் பானை ஓடுகள் கண்டறியப்பட்டுள்ளன. சித்தாமூரில் ஏறதாழ இருபத்தைந்து ஏக்கர் நிலப்பரப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னமான கல்வட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருவக்கரையில் ஏறதாழ முப்பது பெருங்கற்கால ஈமச்சின்னமான கல்வட்டங்களும், அவற்றினுள் கண்ணாடி, வெள்ளி, இரும்புப் பொருட்களும், கறுப்பு சிவப்புப் பானை ஓடுகள் மற்றும் பவள மணிகளும் கிடைத்துள்ளன.[5] வானூரில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த ஈமச் சின்னங்களான முதுமக்கள் தாழிகளும், இரண்டு வரிசைக் கால்களைக் கொண்ட மூடியுடன் கூடிய சவப்பேழைகளும் அகழ்வாய்வின் போது கிடைத்துள்ளன.

**பல்லவர் காலம்**

பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு கி.பி.575இல் தமிழகத்தை ஆட்சி செய்த களப்பிரர்களைத் தோற்கடித்துத் தொண்டை மண்டலத்தில் பல்லவர்களின் ஆட்சியை நிறுவினான். பல்லவர்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.9ஆம் நூற்றாண்டு வரை காஞ்சிபுரத்தைத் தலை நகரமாகக் கொண்டு தொண்டை மண்டலத்தை ஆண்டனர். தொண்டை மண்டலத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள ஓய்மா நாடும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும்

பல்லவ மன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தன.[7]

இப்பகுதிகளில் பல்லவ அரசர்களான மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.847-869), நிருபதுங்கன் (கி.பி.869-897) ஆகியோரின் கல்வெட்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மூன்றாம் நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் ஓய்மா நாட்டைச் சார்ந்த கிளியனூரில் திகை திறலார் என்பவர்களால் திகைதிறல் விண்ணகரம் என்ற பெயரில் விஷ்ணு கோயில் கட்டப்பட்டது.[8] இக்கோயில் இன்று வைகுந்தவாச பெருமாள் கோயில் என்று அழைக்கப்படுகிறது. கிளியனூரைச் சுற்றியுள்ள பகுதிகளான கிடங்கிலில்[9] பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனின் கல்வெட்டும், சாரத்தில்[10] பல்லவ அரசன் நிருபதுங்கனின் கல்வெட்டும் கிடைக்கப் பெற்றுள்ளன. இக்கல்வெட்டுச் சான்றுகளின் மூலம் பல்லவ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் கிளியனூரும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் அதாவது. இன்றைய விழுப்புரம் மாவட்டத்தின் வானூர் மற்றும் திண்டிவனம் வட்டங்கள், பல்லவர்களின் ஆட்சிப்பகுதிகளாக விளங்கின என்பதை அறிய முடிகிறது.

**சோழர் காலம்**

விஜயாலய சோழன் முத்திரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி அங்குச் சோழர்களின் ஆட்சியை நிறுவினான். விஜயாலனை அடுத்து வந்த ஆதித்திய சோழன், பல்லவமன்னன் அபராஜிதனைத் திருப்புறம்பியம் போரில் கி.பி.893இல் தோற்கடித்துக் கொன்றான்.[11] அபராஜிதனுக்குப் பிறகு வந்த பல்லவ மன்னர்கள் திறமையற்று இருந்ததால் தொண்டைமண்டலத்தை ஆதித்திய சோழன் கைப்பற்றித் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்து, சோழப் பேரரசை விரிவடையச் செய்தான். கி.பி.9ஆம் நூற்றாண்டிலிருந்து 13ஆம் நூற்றாண்டுவரை சோழமன்னர்கள் தமிழகத்தின் பெரும்பகுதியை வலிமையோடு ஆட்சி செய்தனர்.[12] சோழமன்னர்களின் கல்வெட்டுகள் கிளியனூரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அதிக அளவில் கிடைக்கின்றன.

முதலாம் பராந்தகசோழனின் (கி.பி.907-955) கல்வெட்டு கிளியனூரிலும்,[13] உத்தமசோழனின் (கி.பி.973-985) கல்வெட்டு தென்சிறுவளூரிலும்[14], முதலாம் இராசராச சோழனின் (கி.பி. 985-1014) கல்வெட்டுகள் கிளியனூர்[15], உலகாபுரம்[16], தாதாபுரம்[17], தென்சிறுவளூர்[18], மரக்காணம்[19] மற்றும் மன்னூரிலும்[20], முதலாம் இராசேந்திர சோழனின் (கி.பி. 1012- 1044)கல்வெட்டுகள் கிளியனூர்[21], உலகாபுரம்[22], வேலூர்[23], தாதாபுரம்[24] மற்றும் மரக்காணத்திலும்[25], இராசாதிராசசோழனின் (கி.பி.1018-1054) கல்வெட்டுகள் கிளியனூர்[26] மற்றும் மன்னூரிலும்[27], அதிராசேந்திர சோழனின் (கி.பி.1067-1070) கல்வெட்டு கிடங்கிலிலும்[28], முதலாம் குலோத்துங்க சோழனின் (கி.பி.1070-1122) கல்வெட்டுகள் கிளியனூர்[29], தாதாபுரம்[30], பேராயூர்[31], கிடங்கில்[32] மற்றும் மாதவிளாகத்திலும்[33], முதலாம் விக்கிரம சோழனின் (கி.பி.1118-1135) கல்வெட்டுகள் உலகாபுரம்[34], கிடங்கில்[35] மற்றும் மாதவிளாகத்திலும்[36], இரண்டாம் குலோத்துங்க சோழனின் (கி.பி.1163-1179) கல்வெட்டு ஒழிந்தியாம்பட்டிலும்[37], மூன்றாம் குலோத்துங்கசோழனின் (கி.பி.1178-1218) கல்வெட்டுகள் தென்சிறுவளூர்[38], எடச்சேரி[39], மரக்காணம்[40], மன்னூர்[41], வேலூர்[42], ஆகிய ஊர்களிலும் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுச்

சான்றுகளின் மூலம் கிளியனூரும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளும் சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இப்பகுதிகளில் சோழர்களின் ஆட்சி நிலவிய காலத்தில் பல்வேறு இடங்களில் கோயில்கள் எழுப்பப்பட்டன. அக்கோயில்கள் சோழர்களின் கலைப் பாணியை சிறப்புற வெளிப்படுத்தி இன்றளவும் புகழ் சேர்த்து வருகின்றன.

**காடவராயர் காலம்**

பல்லவர் வழிவந்த சிற்றரசர்களான காடவராயர்கள். சோழர்களுக்குட்பட்ட சிற்றரசர்களாக இருந்து வந்தனர். இவர்களில் காடவராயர் சிற்றரசன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் (கி.பி.1243 1273) சோழப்பேரரசின் திறமையின்மையைக் கண்டு சோழ அரசன் மூன்றாம் இராசராசனை காஞ்சிபுரத்திற்கு அருகில் கைது செய்து தன்னுடைய தலைமையிடமான சேந்தமங்கலத்தில் சிறையில் அடைத்தான்.[43] அதன் பின்னர்க் கோப்பெருஞ்சிங்கன் சோழர்களின் பகுதியான தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றித் தன்னாட்சி உரிமை பெற்றான். இவனின் கல்வெட்டுகள் பண்டைய தொண்டை மண்டலப் பகுதிகளாக விளங்கும் திண்டிவனம் மற்றும் வானூர் வட்டங்களில் கிளியனூரைச் சுற்றியுள்ள ஊர்களான மன்னூர்[44] மற்றும் தென்சிறுவளூரில்[45] கிடைக்கின்றன. இதன் மூலம் கிளியனூரும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் காடவராயர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

**பாண்டியர் காலம்**

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழர்கள் வீழ்ச்சியடையத் தொடங்கினர். சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு அவன் புதல்வன் மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216-1256) திறமையற்றவனாக இருந்ததால் பாண்டிய மன்னன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216-1244) சோழர்களின் தலைநகரமான தஞ்சையையும், உறையூரையும் தீக்கிரையாக்கினான்.[46] பிறகு சோழமன்னர்களைப் பாண்டிய நாட்டுக்குத் திறை செலுத்துமாறு செய்தான். பாண்டிய அரசன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி.1250-1284) ஆட்சிக்காலத்தில் சோழ அரசன் மூன்றாம் இராசேந்திரன் (கி.பி.1246-1279) பாண்டிய நாட்டுக்குக் கப்பம் செலுத்தி வந்தான்.[47] மேலும் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் தொண்டைமண்டலத்தின் சேந்தமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிசெய்த காடவராய மன்னன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனையும் வெற்றி கொண்டான். இதன்பிறகு காடவராய அரசன் பாண்டியநாட்டிற்குத் திறை செலுத்தினான்.[48] இப்போர் வெற்றிகளின் விளைவாக, பாண்டியர்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேல் சோழநாட்டை ஆட்சிபுரிந்தனர். பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் தொண்டை மண்டலத்தில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. பாண்டிய மன்னர்களான முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்[49] (கி.பி.1216-1244), மாறவர்மன் பராக்கிரம பாண்டியன்[50] (கி.பி.1335-1362), சடையவர்மன் வீரபாண்டியன்[51], வீரபாண்டியன்[52], ஆகியோர்களின் கல்வெட்டுகள் கிளியனூருக்கு அருகிலுள்ள மன்னூரிலும், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்[53] கல்வெட்டு கிளியனூருக்கு அருகிலுள்ள உலகாபுரத்திலும் கண்டறியப்பட்டுள்ளன.

**சம்புவராயர் காலம்**

சம்புவராயர்கள் சோழர்களின் குறுநில மன்னர்களாகத் தொண்டை மண்டலத்தில்



©2023 by KRISHMA PUBLICATION 

இருந்தனர். இவர்கள் 13ஆம் நூற்றாண்டு வரை சோழர்களுக்குக் கட்டுப்பட்டு இருந்தனர். சோழர்களின் மறைவுக்குப் பிறகு சம்புவராயர்கள் பாண்டியர்களின் மேலாதிக்கத்தை ஏற்றனர்.[54] பாண்டிய மன்னன் முதலாம் மாறவர்ம குலசேகரனின் (கி.பி.1268-1318) புதல்வர்கள் சடையவர்மன் வீரபாண்டியனுக்கும், சடையவர்மன் சுந்தரபாண்டியனுக்கும் ஏற்பட்ட வாரிசுரிமைப் போராலும், பின்னர்க் கி.பி.1324இல் ஏற்பட்ட முகமதியர் படையெடுப்பாலும், பாண்டிய அரசு வலிமையிழக்கவே ஏகாம்பரநாத சம்புவராயன் (கி.பி.1322 - 1339) என்ற சம்புவராய சிற்றரசன் "வென்று மண்கொண்ட சம்புவராயன்" என்ற பட்டத்தோடு தன்னை ஒரு சுயாட்சி அரசனாகப் பிரகடனப்படுத்திக்கொண்டான்.[55] இவன் வழிவந்த சம்புவராய அரசர்கள் கி.பி.14ஆம் நூற்றாண்டில் தொண்டை மண்டலப்பகுதிகளை தனித்து ஆண்டனர்.[56] முதலாம் 67 இராசநாராயண சம்புவராயனின் (கி.பி.1338-1362) கல்வெட்டு கிளியனூரில் கிடைக்கப்பெற்றுள்ளது.[57] எனவே கிளியனூரும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளும் சம்புவராயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்துள்ளன என்று அறிய முடிகிறது.

**விசயநகர காலம்**

கி.பி.14ஆம் நூற்றாண்டில் ஹரிகரன், புக்கன் என்ற இரு சகோதரர்கள் தென்னிந்தியாவில் விசயநகர பேரரசைத் தோற்றுவித்தனர். இவ்விரு சகோதரர்களில், புக்கனின் மகன் குமாரகம்பணன் தமிழகத்தின் தென்பகுதியில் முகமதியர்களுடைய படையைச் சமயபுரத்தில் தோற்கடித்தான். வடக்கே சம்புவராயர்களை அடக்கி சம்புவராய மன்னன் இரண்டாம் இராசநாராயணனைக் கொன்றான். இரண்டாம் இராசநாராயணனின் அண்ணன் முதலாம் இராசநாராயண சம்புவராயன் விசயநகர ஆட்சிக்குக் கீழ்ப்பணிந்து சென்றான்.[58] தமிழகத்தில் விசயநகரப் பேரரசை விரிவுபடுத்தியதில் குமரகம்பணன் பெரும்பங்கு வகித்தான். இவன் தமிழகத்தில் திருக்கோவிலூர், விழுப்புரம் மற்றும் செஞ்சி ஆகிய பகுதிகளை விசயநகர ஆட்சியின் கீழக் கொண்டுவந்தான்.[59] இதற்குச் சான்றாக விசயநகர அரசர்களின் கல்வெட்டுகள் கிளியனூரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அதிக அளவில் கிடைக்கின்றன.

விசயநகர மன்னர்களான முதலாம் ஹரிகரனின் (கி.பி.1336-1357) கல்வெட்டு வேலூரிலும்[60], குமார கம்பணனின் (கி.பி.1357-1377) கல்வெட்டு மரக்காணத்திலும்,[61] மல்லிகார்ச்சுனனின் (கி.பி.1447-1465) கல்வெட்டுகள் கிளியனூர்[62], வேலூர்[63], மன்னூர்[64] மற்றும் மரக்காணத்திலும்,[65] கிருஷ்ணதேவராயரின் (கி.பி.1509-1529) கல்வெட்டுகள் கந்ததாடு[66] மற்றும் உப்புவேலூரிலும்,[67] அச்சுதராயரின் (கி.பி.1529-1524) கல்வெட்டுகள் இரும்பை,[68] வானூர்,[69] கிளியனூர்,[70] வேலூர்[71] மற்றும் மரக்காணத்திலும்,[72] சதாசிவ மகாராயரின் (கி.பி.1525-1576) கல்வெட்டுகள் இராயஓட்டை,[73] தெள்ளாமூர்,[74] வேலூர்,[75] இளவம்பட்டு,[76] கிளியனூர்,[77] உலகாபுரம்,[78] வடசிறுவளூர்[79] மற்றும் ஆலத்தூர்[80] போன்ற இடங்களிலும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுச் சான்றுகளின் மூலம் கிளியனூரும் அதனைச் சுற்றி அமைந்துள்ள நிலப்பகுதிகளும் விசயநகர



©2023 by KRISHMA PUBLICATION

அரசர்களின் ஆளுமைக்கு உட்பட்டிருந்தன என்பதைத் தெரிந்துகொள்ளமுடிகிறது.

**செஞ்சி நாயக்கர்கள் காலம்**

கி.பி.1526இல் விசயநகர மன்னர் கிருஷ்ண தேவராயர் சின்னதிம்மநாயக்கனின் மகனான வையப்ப நாயக்கனைச் செஞ்சிக்கு நாயக்கனாக நியமித்தார். வையப்ப நாயக்கன் கி.பி.1526இல் செஞ்சியில் நாயக்கர் ஆட்சியைத் தொடங்கினான். வடக்கே பாலாற்றாங்கரையிலிருந்து தெற்கே கொள்ளிடக்கரை வரையில் உள்ள நிரப்பரப்பு செஞ்சி நாயக்கர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது.[81] இப்பகுதிகளைச் செஞ்சிநாயக்க வம்சத்தவர்கள் கி.பி.16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து கி.பி.17ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை தொடர்ந்து ஆட்சி செய்து வந்தனர்.[82] கிளியனூரும் அதனைச் சூழ்ந்த பெரும் நிலப்பரப்பும் செஞ்சி நாயக்கர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தன என்பதை இப்பகுதிகளில் மிகுதியாகக் கிடைக்கும் அவர்கள் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகிறது.

**அடிக் குறிப்புகள்**


1. ந.க.மங்கள முருகேசன், வரலாறு, சென்னை, 2004, ப.16.
2. K.Rajan, Archaeolegical Gazetteer of Tamil Nadu, Thanjavur, 1999, P.306.
3. Ibid., p.303.
4. Ibidp.304.
5. Ibid. p.306.
6. Ibid. p.307.
7. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும், சென்னை 1981, ப.2
8. A.R.E., No. 158 of 1919.
9. A.R.E., No.280 of 1902.
10. சு.இராசவேலு, "சாரம் பல்லவர் கல்வெட்டு ஆவணம் . இதழ் 14, 2003, ப.2.
11. தி.வை.சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச்சோழர் வரலாறு அண்ணாமலைநகர், 1994, ப.12.
12. மேலது. ப.13.
13. A.R.E., No. 148 of 1919.
14. கோ. விஜயவேணுகோபால். ஆ. துரைரங்கம், தென சிறுவளூர் கல்வெட்டுக்கள்", ஆவணம் இதழ் 13.2002 பக்.38-39.
15. A.R.E., No.160 of 1919.
16. Ibid..No. 127 of 1919.
17. Ibid., No.18 of 1919.
18. கோ விஜயவேணுகோபால். ஆ.துரைரங்கம். "ஒழிந்தியம்பட்டு திருஅரசிலி ஆளுடையார் கோயில் கல்வெட்டுக்கள்". ஆவணம் இதழ் 12, 2001, பக்.39–40.
19. A.R.E., No.23 of 1919.
20. Ibid., No.55 of 1919.
21. Ibid., No. 149 of 1919.
22. Ibid., No. 140 of 1919.
23. Ibid., No.111 of 1919.
24. Ibid., No. 19 of 1919.
25. Ibid., No.29 of 1919.
26. Ibid., No. 151 of 1919.
27. Ibid.. No.71 of 1919.
28. Ibid.. No.227 of 1919.
29. Ibid., No.159 of 1919.
30. Ibid., No. 13 of 1919.




©2023 by KRISHMA PUBLICATION

31. ஆ.துரைரங்கம், கோ.விஜயவேணுகோபால், "வானூர் வட்டக் கல்வெட்டுக்கள்", ஆவணம் இதழ் 14,2003, பக்.75-76.
32. A.R.E., No.224 of 1902.
33. A.R.E., No.389 of 1925.
34. A.R.E.. No.128 of 1919.
35. A.R.E., No.225 of 1902.
36. A.R.E., No.391 of 1925.
37. கோ. விஜயவேணுகோபால், ஆ.துரைரங்கம் "ஒழிந்தியம்பட்டு திருஅரசிலி ஆளுடையார் கோயில் fynt I L f fs", ஆவணம் இதழ் 12, 2001, பக்.24-27
38. கோ. விஜயவேணுகோபால், ஆ. துரைரங்கம், தென சிறுவளூர் கல்வெட்டுக்கள்". ஆவணம் இதழ் 13, 2002, ப.41.
39. மேலது, ப.31.
40. A.R.E., No.33 of 1919.
41. A.R. E., No.63 of 1919.
42. Ibid. No.114 of 1919.
43. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், பேணுசெந்தமிழ் வாழப் பிறந்த காடவன் கோப்பெருஞ்சிங்கன், சென்னை, 1965, ப.85.
44. A.R.E., No.62 of 1919.
45. கோ. விஜயவேணுகோபால், ஆ. துரைரங்கம், "தென் சிறுவளூர் கல்வெட்டுக்கள்", ஆவணம் இதழ் 13, 2002, பக்.42–43.
46. தி.வை.சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, சென்னை 1950, ப.130.
47. மேலது, ப.131.
48. மேலது, ப.134.
49. A.R.E., No.97 of 1919.
50. Ibid., No.83 of 1919.
51. Ibid., No.93 of 1919.
52. Ibid..No.54 of 1919.
53. Ibid..No. 132 of 1919.
54. N.சேதுராமன், பாண்டியர் வரலாறு, கும்பகோணம், 1989, ப.227.
55. மேலது, ப.30.
56. கல்வெட்டு இதழ் 23, ப.1
57. A.R.E., No. 165 of 1919
58. கல்வெட்டு இதழ் 23, ப.4.
59. V.M.Krishnamurthy, History of South India, Neyyoor, 1983, p.495.
60. A.R.E., No. 117 of 1919.
61. Ibid., No.34 of 1919.
62. Ibid., No.154 of 1919.
63. Ibid., No.113 of 1919.
64. Ibid., No.84 of 1919.
65. Ibid., No.42 of 1919.
66. Ibid., No.44 of 1919.
67. Ibid., No.100 of 1919.
68. ஆ.துரைரங்கம், கோ.விஜயவேணுகோபால், "வானூர் வட்டக் கல்வெட்டுக்கள்", ஆவணம் இதழ் 14, 2003. பக்.78-79.
69. கோ.விஜயவேணுகோபால், ஆ. துரைரங்கம், 'வானூர் வட்டக் கல்வெட்டுக்கள்" ஆவணம் இதழ் 15, 2004, பக்.97-98.

70. A.R.E., No. 167 of 1919
71. Ibid.,No. 104 of 1919
72. Ibid., No.43 of 1919.
73. 8.4. ஆ.துரைரங்கம், கோ.விஜயவேணுகோபால், வானூர் வட்டக் கல்வெட்டுக்கள், ஆவணம் இதழ் 14, 2003, ப3
74. மேலது, பக்.74 75.
75. A.R.E., No. 109 of 1919.
76. ஆ.துரைரங்கம், வானூர் வட்டக் கல்வெட்டுக்கள், ஆவணம் இதழ் 13, 2002, ப.34.
77. A.R.E., No. 169 of 1919.
78. Ibid., No.145 of 1919.
79. A.R.E., No.382 of 1919.
80. A.R.E., No.49 of 1919.
81. Ibid., No. 118 of 1919.
82. அ.இராமசாமி, தமிழ்நாட்டு வரலாறு. மதுரை. 1981, ப.201.
83. மேலது, ப.203.

*****